தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில்
YAMAHA SHOWROOM
தமிழர் தைத்திருநாளை முன்னிட்டு குறிப்பிட்ட மாடல்களுக்கு மட்டும்
₹ 10,000 SPECIAL OFFER

ஸ்ரீ கோமதி ஆட்டோ ஏஜென்சீஸ்
197-B,மெயின் ரோடு, சங்கரன்கோவில்
99442 14004


# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM புலனாய்வு நாளிதழ்

PRGI NO: TNTAM/25/A1018


SN ஆட்டோ கன்சல்டிங்
டூவீலர் விற்க வாங்க...
பைனான்ஸ் வசதி உண்டு
317, ராஜபாளையம் ரோடு, SBI வடபுறம், சங்கரன்கோவில்
G.சுதாகர் - 99656 02104

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 234 16.2.2026 MONDAY MAASI : 4 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 234 16.2.2026 திங்கள்கிழமை மாசி : 4 விலை : ரூ.5/–

## வள்ளலார் பிறந்தநாளையொட்டி

# “ஆண்டுதோறும் 3 நாட்கள் விழா!”

## முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை: பிப்.16-

வள்ளலார் பிறந்தநாளையொட்டி ஆண்டுதோறும் மூன்று நாட்கள் விழா நடத்தப்படும் என்பது உட்பட 7 அறிவிப்புகளை அனைத்துலக வள்ளலார் மாநாட்டில் முதல்வர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டார்.

இந்து சமய அறநிலையத் துறை சார்பில் சென்னையில் நடைபெற்ற “அனைத்துலக வள்ளலார் மாநாடு 2026”யை தொடங்கி வைத்துப் பேசிய முதல்வர் மு.க. ஸ்டாலின், ‘‘கடந்த ஆண்டு 5 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்ட அனைத்துலக முத்தமிழ் முருகர் மாநாட்டை நடத்தி எல்லோரையும் திரும்பி பார்க்க வைத்தோம். இன்றைக்கு அனைத்துலக வள்ளலார் மாநாட்டை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

வள்ளலாரை ஏன் நாம் உயர்த்திப் பிடிக்கிறோம் என்றால், “வாடிய பயிரை கண்ட போதெல்லாம் வாடினேன்” என்று சொல்லி, உலகுக்கே ‘தனிப்பெரும் கருணை’ என்ற அன்பு வழியை போதித்தவர் வள்ளலார். அவரது வழியில்தான், நமது திராவிட மாடல் அரசும், ஏழை எளிய மக்களுக்கான பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. ஏழை மக்களின் பசியை ‘பிணி’ என்று சொன்னார் வள்ளலார்! அந்தப் பிணியை ஒழிக்கும் மருந்துதான் நமது திராவிட மாடலின் திட்டங்கள்! அதனால்தான், பள்ளிகளில், காலை உணவுத் திட்டம் முதல் முதியோர்களுக்கான தாயுமானவர் திட்டம் வரை, அனைத்து வயதினரையும், கருணையோடு அரவணைக்கின்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

வள்ளலார் தமிழ்ச்சமூகத்தில் உதித்த புரட்சியாளர்; மாண்பாளர்! அவரைப் போற்ற வேண்டியது, தமிழ்நாட்டின் கடமை! என்னுடைய பேச்சுகளிலும், சமூக வலைத்தளப் பதிவுகளிலும் வள்ளலாரை நிறைய நான் மேற்கோள் காட்டியிருக்கிறேன். வள்ளலாரின் கோட்பாடுகளை மேற்கோள் காட்டுவது மட்டுமல்ல, அவற்றை செயல் வடிவத்தில் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறோம்.



அவற்றையெல்லாம் சுருக்கமாக சொல்ல வேண்டும் என்றால், கருணாநிதி ஆட்சிக் காலத்தில், சென்னையில் வள்ளலார் வாழ்ந்த பகுதிக்கு, ‘வள்ளலார் நகர்’ என்று பெயர் வைத்தார். அந்த வள்ளலார் நகர் பேருந்து நிலையத்தை 10 கோடி ரூபாய் செலவில் புனரமைத்திருக்கிறோம். நம்முடைய திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றதும் வள்ளலார் பிறந்தநாளை, ‘தனிப்பெருங்கருணை நாளாக’ அறிவித்தோம்.

வள்ளலாரின் 200ஆவது பிறந்தநாள் தருமசாலை நிறுவப்பட்ட 156ஆவது ஆண்டு தொடக்கம் ஜோதி தரிசனம் காட்டுவித்த 152ஆவது ஆண்டு ஆகியவற்றை இணைத்து, 2022 அக்டோபரில் இருந்து 2023 அக்டோபர் வரை தொடர்ச்சியாக ஓராண்டு காலம் முப்பெரும் விழாக்களை கொண்டாடினோம்.

அதுமட்டுமல்ல, ‘வள்ளலார் 200’ என்ற பெயரில் இலச்சினை, அஞ்சல் உறை, சிறப்பு மலர் வெளியிட்டு அன்னதானம், மாணவர்களுக்கு இலக்கியப் போட்டிகள் என்று பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தினோம்.

வள்ளலார் வாழ்ந்த மருதூர் இல்லத்தை புனரமைத்தோம். தைப்பூசத்தை முன்னிட்டு, வடலூர் வள்ளலார் தெய்வ நிலையத்தில், மூன்று நாட்கள் அங்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இன்றைக்கு திருவொற்றியூர் நெடுஞ்சாலைக்கு “வள்ளலார் நெடுஞ்சாலை” என்று பெயர் சூட்டி திறந்து வைத்திருக்கிறோம். இந்தச் சாதனைகளின் தொடர்ச்சியாகதான், வள்ளலார் பற்றாளர்களின் கோரிக்கையின் அடிப்படையில், அவரின் உயரிய கருத்துகளை, வாழ்க்கை நெறிகளை, உலகெங்கும் போற்றிடும் நோக்கத்துடன் இன்று, அனைத்துலக வள்ளலார் மாநாடு நடத்தப்படுகிறது.

இந்த மாநாட்டிற்கு வந்துவிட்டு புதிய அறிவிப்புகளை வெளியிடாமல் சென்றால், சேகர்பாபு அவர்களுக்கும் நிம்மதி இருக்காது ரூ எனக்கும் திருப்தி இருக்காது.

அதனால், ஏழு அறிவிப்புகளை நான் வெளியிட விரும்புகிறேன்.

முதல் அறிவிப்பு ரூ இந்த அனைத்துலக வள்ளலார் மாநாடு நடைபெற்றதை குறிக்கின்ற விதமாக இந்த பள்ளி வளாகத்தில், நினைவுத் தூண் அமைக்கப்படும்.

இரண்டாவது அறிவிப்பு ரூ வடலூரில், சன்மார்க்க பயிற்சிப் பள்ளி ஏற்படுத்தப்படும். அந்தப் பள்ளியில் திருவருட்பா இசைப்பயிற்சியும் அளிக்கப்படும்.

மூன்றாவது அறிவிப்பு ரூ வடலூரில், வள்ளலார் பெயரில் மூலிகைத் தோட்டம் அமைக்கப்படும்.

நான்காவது அறிவிப்பு ரூ ‘ஸ்பிரிச்சுவல் அல்கெமி’ என்ற வள்ளலார் புத்தகம் அறநிலையத் துறை பதிப்பகத்தின் மூலமாக வெளியிடப்படும்.

ஐந்தாவது அறிவிப்பு ரூ வள்ளலார் பிறந்தநாளையொட்டி ஆண்டுதோறும் மூன்று நாட்கள் விழா நடத்தப்படும்.

ஆறாவது அறிவிப்பு ரூ மேட்டுக்குப்பம், மருதூர், கருங்குழி ஆகிய இடங்களில், ‘வள்ளலார் அன்னதான கூடங்கள்’ திறக்கப்படும்.

ஏழாவது அறிவிப்பு ரூ கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அருகில் அமைந்து வரும் பூங்காவுக்கு ‘வள்ளலார் பூங்கா’ என பெயர் சூட்டப்படும்.

அதேபோல், தலைநகர் சென்னையில், வள்ளலார் ஆய்வு மையம் அமைக்கப்படும். அந்த ஆய்வு மையம் இந்து சமய அறநிலையத் துறையின் வளாகத்தில் அமைக்கப்படும். மற்ற கோரிக்கைகளும் நிச்சயம் பரிசீலிக்கப்படும்.

இங்கே கூடியிருக்கும் அன்பர்கள் எல்லோரிடத்திலும் நான் கேட்டுக் கொள்ள விரும்புவது, வள்ளலாரைப் போற்றுவதோடு, நம்முடைய பணி நின்றுவிடக் கூடாது; அவருடைய நோக்கங்களை மக்கள் முழுமையாக உணர்ந்து, கடைப்பிடிக்க பாடுபட வேண்டும்! அதற்கு இந்த மாநாடு வழி வகுக்கவேண்டும். ஏனென்றால், நம்முடைய பண்பாட்டு அடையாளங்களுக்கு வேறு வர்ணம் பூச நினைக்கிறார்கள், வள்ளலாரின் நோக்கங்களை சிதைத்திட நாம் அனுமதிக்க கூடாது! பிரிவினைச் சக்திகளுக்கு ஒருபோதும் இடம் கொடுக்காமல், அன்பும் பண்பும் அறனும் கருணையும் கொண்ட சமுதாயத்தை உருவாக்க உழைப்போம்!

சமத்துவம் போற்றும் அன்பு வழியாம் வள்ளலார் நெறி எங்கெங்கும் பரவட்டும்! என்றென்றும் நிலைக்கட்டும்! அவர் ஏற்றி வைத்த ஜோதியைப் போல சுடர்விட்டும் அணையாத அடுப்பைப் போல அனைவரின் தேவைகளை நிறைவேற்றி, இடர் போக்கும் இனிய அரசாகவும், நம்முடைய திராவிட மாடல் அரசு என்றென்றும் திகழும்‘’ என்று தெரிவித்தார்.

நிகழ்ச்சியில், அமைச்சர்கள் எ.வ.வேலு, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், சேகர்பாபு, சென்னை மாநகராட்சி மேயர் பிரியா, இந்து என். ராம், சுகி சிவம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## இந்தியா உடனான உறவை மீட்டெடுக்க வங்கதேசம் விரும்புகிறது

### தாரிக் ரஹ்மான் ஆலோசகர்



இந்தியா உடனான உறவை மீட்டெடுக்க வங்கதேசம் விரும்புகிறது என்றும், ஏற்பட்டிருக்கும் மாற்றத்தை இந்தியா அங்கீகரிக்க வேண்டும் என்றும் தாரிக் ரஹ்மானின் ஆலோசகர் ஹுமாயூன் கபீர் தெரிவித்துள்ளார்.

வங்கதேசத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வங்கதேச தேசியவாத கட்சி(பிஎன்பி) மூன்றில் இரண்டு பங்குக்கும் மேலான இடங்களில் வெற்றி பெற்றது. அக்கட்சியின் தலைவர் தாரிக் ரஹ்மான் வரும் 17ம் தேதி வங்கதேச பிரதமராக பதவியேற்க இருக்கிறார்.

இந்நிலையில், தாரிக் ரஹ்மானின் ஆலோசகர் ஹுமாயூன் கபீர் பிடிஐ செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில், இந்திய வங்கதேச உறவை மீட்டெடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்தியுள்ளார். இவ்விஷயத்தில், வங்கதேசத்தில் ஏற்பட்டிருக்கும் மாற்றத்தை இந்தியா அங்கீகரிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். அவர் தனது பேட்டியில், பிஎன்பியின் மகத்தான தேர்தல் வெற்றியை அடுத்து வங்கதேசத்தில் மாறி இருக்கும் அரசியல் யதார்த்தத்தை அங்கீகரிக்கும் பொறுப்பு இந்தியாவுக்கு உள்ளது. இந்த மாற்றம் இந்தியாவின் மனநிலையிலிருந்து வர வேண்டும். இன்றைய வங்கதேசத்தில் ஷேக் ஹசீனாவும் அவாமி லீக்கும் இனி இல்லை. மக்கள் வங்கதேச தேசியவாதக் கட்சிக்கு ஆதரவாக தெளிவான தீர்ப்பை வழங்கியுள்ளனர்.

வங்கதேசத்தில் ஆயிரத்து 500க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதற்கு காரணமான “பயங்கரவாதி” ஷேக் ஹசீனா. வங்கதேசத்தின் ஸ்திரத்தன்மையை பாதிக்கும் வகையில் ஹசீனாவோ அல்லது அவாமி லீக் பிரமுகர்களோ தங்கள் மண்ணை பயன்படுத்தாமல் இருப்பதை இந்தியா உறுதி செய்ய வேண்டும். வங்கதேசத்தின் இறையாண்மையைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் எந்தவொரு நடவடிக்கையிலும் இந்தியா உடந்தையாகக் கருதப்படக்கூடாது. இந்த பிரச்சினை தீர்க்கப்பட்டவுடன், வழக்கமான ராஜதந்திர ஒத்துழைப்பு மீண்டும் தொடங்கலாம். நாம் அண்டை நாடுகள், பரஸ்பர நன்மைக்காக ஒன்றாகச் செயல்பட வேண்டும்.

பிரதமர் நரேந்திர மோடிக்கும் தாரிக் ரஹ்மானுக்கும் இடையே சமீபத்தில் அன்பான தொலைபேசி உரையாடல் நிகழ்ந்தது. அப்போது, ஒரு வசதியான நேரத்தில் இந்தியாவுக்கு வருகை தருமாறு பிரதமர் மோடி, ரஹ்மானுக்கு அழைப்பு விடுத்தார்.

நாட்டின் பொருளாதார பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் தாரிக் ரஹ்மான் கவனம் செலுத்துவார். இங்கு நிலைமைகள் சீரானவுடன், இந்திய வருகை உட்பட சர்வதேச பயணங்களை அவர் மேற்கொள்வார். மக்களின் வலுவான ஆணைக்கு இணங்க, வலுவான நிலையில் இருந்து நாங்கள் பேச்சுவார்த்தை நடத்துவோம். தேசிய நலன் மற்றும் நமது பிரதேசத்தின் நல்வாழ்வு எங்கள் வெளியுறவுக் கொள்கையின் மையமாக இருக்கும். நாங்கள் விரும்புவது சமநிலையான உறவுகளைத்தான். ஒரு குறிப்பிட்ட நாட்டோடு மட்டுமே உறவுகளை வைத்திருக்கப் போவதில்லை.

வங்கதேசத்தில் நிகழ்ந்த ஆகஸ்ட் எழுச்சிக்குப் பிறகு அரசாங்கம் இல்லாத ஐந்து நாட்களில் கூட, யாரும் சிறுபான்மையினரைத் தாக்கவில்லை. இங்கே வகுப்புவாத நல்லிணக்கம் நிலவுவதை அது காட்டுகிறது.

பயங்கரவாதத்தை எதிர்கொள்வதில் வலுவான பிராந்திய ஒத்துழைப்பு மிகவும் முக்கியம். தனிமைப்படுத்துதல் முன்னேற்றத்தைத் தடுக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கங்கள் தகவல்களைப் பரிமாறிக் கொள்ள வேண்டும். தீவிரவாதிகள், பயங்கரவாதிகளைக் கண்காணித்து நம்பிக்கையை வளர்க்க ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். பிஎன்பி தலைமையிலான அரசாங்கம் பிராந்தியத்திலும் அதற்கு அப்பாலும் அமைதி, செழிப்பு மற்றும் ஒருங்கிணைந்த பொருளாதார மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்புக்கு முன்னுரிமை அளிக்கும் என்று தெரிவித்தார்.

தாரிக் ரஹ்மான் வரும் 17ம் தேதி வங்கதேசத்தின் பிரதமராக பதவியேற்க உள்ள நிலையில், பதவியேற்பு விழாவில் கலந்து கொள்ள பிரதமர் நரேந்திர மோடிக்கு வங்கதேசம் அழைப்பு விடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## “ஒரு லட்சம் தந்தாலும் திமுகவுக்கு வாக்களிக்க மாட்டார்கள்” டிடிவி.தினகரன் தீர்க்கம்

சென்னை, பிப்.16-

“மாதம் ரூ.1 லட்சம் தருவதாகக் கூறினாலும் திமுகவுக்கு மக்கள் வாக்களிக்க மாட்டார்கள்” என்று அமமுக பொதுச்செயலாளர் டிடிவி. தினகரன் கூறினார்.

இது தொடர்பாக நேற்று மதுரையில் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தேசிய ஜனநாயகக் கூட்டணி பலமாக உள்ளது. புதிய கட்சிகள் இணைவதற்கும் வாய்ப்பு உள்ளது. ஜெயலலிதாவின் ஆட்சி அமைவதற்கு, அவர் வழி வந்தவர்கள் என்று சொல்பவர்கள், தொண்டர்களெல்லாம் ஒன்றிணைய வேண்டும் என்று கடந்த 7 ஆண்டுகளாக கூறிக் கொண்டிருப்பவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இணைய வேண்டும். தனக்கு என்ன கிடைக்கும் என்று நினைக்காமல் கட்சி வெற்றிபெற வேண்டும் என நினைத்து ஒன்றிணைய வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் முகத்திரை கிழிக்கப்படும்.

தற்போது, ஜெயலலிதாவின் தொண்டர்கள் ஓரணியில் இணைந்து விட்டதால், தோல்வி பயத்தில் உள்ள திமுக, மகளிர் உரிமைத் தொகை ரூ.5 ஆயிரம் அளித்துள்ளது. இது கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைத்தது போன்றதாகும். அவர்கள் மாதம் ரூ.1 லட்சம் தருவதாகக் கூறினாலும், திமுகவுக்கு மக்கள் வாக்களிக்க மாட்டார்கள். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களின் நலத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி, மகளிர் உரிமைத் தொகைக்கு செலவழிக்கப்படுவதாக கேள்விப்பட்டேன். என்டிஏ ஆட்சி அமைந்தவுடன் பழங்குடி மக்கள் ஆதிதிராவிட மக்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் செய்து தரப்படும்.

பள்ளிகளிலேயே கஞ்சா பொட்டலங்கள் கிடைக்கும் அவல நிலையில் திமுக ஆட்சி உள்ளது. கூலிப்படைகள் அதிகரித்துள்ளன. போதைக் கலாசாரத்தால், பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத மாநிலமாக உள்ளது. தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றாமல், ஓட்டுக்குப் பணம் கொடுத்து வென்றுவிடலாம் என திமுக நினைக்கிறது. வரும் தேர்தலுடன் திமுக ஆட்சி முடிவுக்கு வந்துவிடும். இவ்வாறு அவர் கூறினார்.

## “ஏழைகளின் திருமண மண்டபம் இனி அரசு சமுதாயக் கூடம்!” : அமைச்சர் உரையின் ‘பஞ்ச்’

திண்டுக்கல், பிப்.16-

ஆத்தூர் தொகுதியில் குக்கிராமங்களிலும் நவீன சமுதாயக் கூடங்கள் கட்டப்பட்டுள்ளதால், ஏழை மக்கள் தங்கள் இல்ல விழாக்களைக் குறைந்த செலவில் நடத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது என அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதத்துடன் தெரிவித்தார்.

கல்விக்கு முன்னுரிமை: முருநெல்லிக்கோட்டை ஆசாரிபுதூர் பள்ளியில் ₹34.25 லட்சம் மதிப்பில் புதிய வகுப்பறைகள் திறப்பு. நவாமரத்துப்பட்டியில் ₹63.50 லட்சம் மற்றும் பொம்மனங்கோட்டையில் ₹50 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட நவீன பிரம்மாண்ட சமுதாயக் கூடங்கள் மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிப்பு. எல்லோருக்கும் எல்லாம், பாகுபாடின்றி



அனைத்துத் திட்டங்களும் கடைக்கோடி மனிதனுக்கும் சென்றடைவதே திராவிட மாடல் ஆட்சியின் நோக்கம்.

விழாவிற்கு மாவட்ட திட்ட இயக்குநர் பெ.திலகவதி தலைமை தாங்கினார். திண்டுக்கல் மாவட்ட துணைப் பதிவாளர் பொது விநியோகத் திட்டம் சு.பா.கார்த்திகேயன், மேற்கு வட்டாட்சியர் சுல்தான் சிக்கந்தர், ஒன்றிய செயலாளர் மணி, ரெட்டியார்சத்திரம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மலரவன், கண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சின்னு (எ) முருகன் வரவேற்றார்.



# கேரளாவிலேயே மிகக் குறைந்த வயதில் உடல் உறுப்பு தானம் செய்த 10 மாதக் குழந்தை

பத்தனம்திட்டா, பிப்.16-

கேரள மாநிலம் பத்தனம்திட்டா மாவட்டத்தைச் சேர்ந்த 10 மாத பெண் குழந்தை அலின் ஷெரின் ஆபிரஹாம். கடந்த 5ம் தேதி குழந்தையின் தாய், தாத்தா, பாட்டி ஆகியோர் கோட்டயத்திலிருந்து திருவல்லாவுக்கு காரில் சென்றனர். அப்போது எதிரில் வந்த மற்றொரு கார் இவர்களின் கார் மீது மோதியது.

இதில் ஷெரினின் தாய், தாத்தா மற்றும் பாட்டி காயமடைந்தனர். படுகாயமடைந்த குழந்தை சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் மூளைச் சாவு அடைந்ததாக மருத்துவர்கள் அறிவித்தனர். இதையடுத்து, மருத்துவர்கள் குழந்தையிடமிருந்து கல்லீரல், 2 சிறுநீரகங்கள், இதய வால்வு, 2 கண்கள் ஆகியவற்றை தானமாக பெற்றனர். இதைத் தொடர்ந்து குழந்தையின் கல்லீரல், திருவனந்தபுரம் கிம்ஸ் மருத்துவமனையில் உள்ள 6 மாதக் குழந்தைக்குப் பொருத்தப்பட உள்ளது.

சிறுநீரகங்கள், திருவனந்தபுரம் மருத்துவக் கல்லூரியில் உள்ள மற்றொரு குழந்தைக்கு வழங்கப்பட்டது. இதய வால்வு மற்றும் கண்கள், சித்ரா இன்ஸ்டிடியூட் மற்றும் அமிர்தா மருத்துவமனையில் சிகிச்சை பெறுவோருக்கு தானமாக வழங்கப்பட்டன.

இதன் மூலம் கேரளாவிலேயே மிகக் குறைந்த வயதில் உடல் உறுப்பு தானம் செய்த பெருமை அலின் ஷெரினுக்கு கிடைத்துள்ளது. இதையடுத்து ஷெரின் தொடர்பான செய்திகள், புகைப்படங்கள், வீடியோக்கள் சமூக வலைதளங்களில் வைரலாகியுள்ளன.

இதுகுறித்து கேரள சுகாதாரத்துறை அமைச்சர் வீணா ஜார்ஜ் தனது சமூக வலைதளப் பக்கத்தில் கூறும்போது, “குழந்தை இறந்த துக்கத்தில் இருந்தபோதும், குழந்தையின் உறுப்புகளை பெற்றோர் தானமாக அளித்தது பாராட்டுக்குரியது. துயரத்தில் இருக்கும் குடும்பத்துக்கு மாநில அரசு துணை நிற்கிறது. அவர்களின் செயல் கேரளாவில் உறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வை அதிகப்படுத்தியுள்ளது’’ என்றார்.

# 160 கி.மீ. வேகத்தில் சிறுவன் ஓட்டிய கார் விபத்து: 7 பேர் உயிரிழப்பு, 5 பேர் படுகாயம்

பெங்களூரு, பிப்.16-

பெங்களூருவை சேர்ந்த அயன் அலி (17) தன் நண்பர்கள் அஷ்ரம் ஷெரீஃப் (16), ஏத்தன் ஜார்ஜ் (17), அஷ்வின் நாயர் (17), பரத் (17), முகமது ஃபர்ஹான் (18) ஆகியோருடன் நேற்று முன்தினம் காலை 5 மணியளவில் ஹொசக்கோட்டையில் இருந்து தேவனஹள்ளி நோக்கி காரில் சென்றார். அப்போது அயன் அலியின் கார் இரு சக்கர வாகனத்தின் மீது மோதியது. அதில் இரு சக்கர வாகனத்தில் பயணித்த ககன் (27) சம்பவ இடத்தில் உயிரிழந்தார்.



மேலும் முன்னால் சென்ற சரக்கு வாகனத்தின் மீது கார் மோதியதில் அதன் ஓட்டுநர் பாலசுப்பிரமணியன் (32) படுகாயம் அடைந்தார். அயன் அலி மணிக்கு 160 கி.மீ. வேகத்தில் சரக்கு வாகனத்தின் மீது மோதியதில் அதன் சக்கரங்கள் தனித்தனியாக உடைந்து எதிரில் வந்த வாகனங்கள் மீது மோதியதில் அடுத்தடுத்து 2 வாகனங்கள் விபத்துக்கு உள்ளாயின. அதனால் 4 பேர் காயமடைந்தனர். அயன் அலி பயணித்த எக்ஸ்யூவி 700 கார் உடைந்து நொறுங்கி உருக்குலைந்து போனதில் 6 பேரும் உயிரிழந்தனர்.

போலீஸார் மேற்கொண்ட விசாரணையில், 17 வயதான அயன் அலி மணிக்கு 160 கி.மீ. முதல் 170 கி.மீ. வேகத்தில் காரை ஓட்டியதால், விபத்து ஏற்பட்டது தெரிய வந்தது. அயன் அலி உள்ளிட்ட 6 பேரும் 10ம் வகுப்பு மாணவர்கள் என தெரிய வந்துள்ளது.

# நாடு முழுவதும் உள்ள அரசு கல்லூரிகளில் கூடுதலாக 10,023 மருத்துவ இடங்களுக்கு ஒப்புதல்

புதுடெல்லி, பிப்.16-

அரசு மருத்துவக் கல்லூரிகளில் கூடுதலாக 10,023 இடங்களை அதிகரிக்க மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களின் கேள்விகளுக்கு, மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் ஜே.பி.நட்டா அளித்த பதிலில் கூறியிருப்பதாவது: நாடு முழுவதும் மருத்துவர்களின் பற்றாக் குறையை சமாளிக்க, அரசு மருத்துவக் கல்லூரிகளில் கூடுதலாக 10,023 இடங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. எம்பிபிஎஸ் படிப்புக்கு 5,023 இடங்கள் மற்றும் முதுநிலை மருத்துவப் படிப்புக்கு 5,000 இடங்கள் ஒதுக்கப்படும். இதன் மூலம் இந்தியாவில் மருத்துவக் கட்டமைப்பு அதிகரிக்கும்.

மத்திய அரசின் 3ம் கட்ட திட்டத்தின் கீழ் கூடுதல் மருத்துவ இடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதனால் மாநில அரசுகள் மற்றும் மத்திய அரசின் மருத்துவக் கல்லூரிகளில் இளநிலை மற்றும் முதுநிலை மருத்துவப் படிப்புகள் அதிகரிக்கும். இந்த கூடுதல் இடங்கள் 2025 2026ம் ஆண்டு முதல் 2028 2029ம் ஆண்டுக்குள் அமல்படுத்தப்படும். இந்தக் கூடுதல் இடங்களை உருவாக்க ஒவ்வொரு இடத்துக்கும் ரூ.1.50 கோடி செலவிடப்படும். அந்தத் தொகையில் அரசு மருத்துவக் கல்லூரிகளின் உள்கட்டமைப்பு வசதிகள், ஆய்வகங்கள், கருவிகள் போன்ற மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும். அதன்படி, திட்ட அறிக்கையை சமர்ப்பிக்கும்படி மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேச அரசுகளைக் கேட்டுக் கொண்டுள்ளோம். இந்தப் புதிய திட்டத்தில் கிராமப்புறங்களுக்கு முன்னுரிமை அளிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மருத்துவப் படிப்புகளுக்கான இடங்களை அதிகரிக்கும் அதேவேளையில், விதிமுறைகள், சீர்திருத்தங்களை தேசிய மருத்துவ ஆணையம் அறிமுகப்படுத்தி உள்ளது. அதில் மேம்பட்ட மருத்துவக் கல்வி, ஆசிரியர்கள் நியமனம், அவர்களுக்கான தகுதி வரையறை போன்றவை குறித்து விரிவான வழிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.



ஆண்டுதோறும் மருத்துவப் படிப்புக்கான இடங்களுக்கு அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் விண்ணப்பிக்கின்றனர். தற்போது கூடுதலாக 10,023 இடங்கள் கொண்டு வரப்பட்டுள்ளதால், மருத்துவ மாணவர் சேர்க்கையின் போது கணிசமான இடங்கள் கிடைக்கும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# கிரிஷ் சோடங்கருக்குப் பதிலாக கே.சி.வேணுகோபால்: மாற்ற நினைக்கிறதா... மாற்றி யோசிக்கிறதா காங்கிரஸ்

சென்னை, பிப்.16-

இரண்டு தினங்களுக்கு முன்பு பிரவீன் சக்கரவர்த்தியையும் மாணிக்கம் தாகூரையும் தனியே அழைத்துப் பேசினார் ராகுல் காந்தி. இவர்கள் இருவரும் ‘அதிகாரத்தில் பங்கு’ கோஷத்தை முன்னெடுப்பவர்கள் என்பதால் இவர்களை ராகுல் அழைத்துப் பேசியது பல்வேறு ஊகங்களை உலவவிட்டது. இனிமேல் இருவரும் அடக்கிவாசிக்கலாம் என்றும் சொல்லப்பட்ட நிலையில், மீண்டும், “அதிகாரப் பகிர்வு அவசியம்; ஆட்சியில் பங்கு எங்களின் உரிமை” என முழங்கி இருக்கிறார் மாணிக்கம் தாகூர்.



இதற்கு பதிலளிக்கும் விதமாக நேற்று பேட்டியளித்த திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, “கூட்டணி ஆட்சிக்கு வாய்ப்பில்லை. இதுபற்றி ராகுல் காந்தி, கார்கே, செல்வப்பெருந்தகை ஆகியோர் கேட்டால் பதில் சொல்லலாம் மற்றவர்களுக்கெல்லாம் பதில் சொல்ல முடியாது” என்று சொன்னார். இதனிடையே, "தமிழகத்தில் ஆட்சியில் பங்கு என்பது தற்போதைக்கு செட் ஆகாது என்பது எங்களுக்கும் தெரியும் அவர்களுக்கும் (காங்கிரஸ்) தெரியும்.

கூட்டணியை உடைக்கச் சிலர் போடும் சதித் திட்டத்தைப் பற்றி நானும் ராகுலும் கவலைப்படவில்லை. அரசியலைத் தாண்டி ராகுல் என்னை ஒரு மூத்த சகோதரராகப் பார்க்கிறார்; நானும் அவரை அப்படித்தான் கருதுகிறேன். அவர் என் குடும்பத்தில் ஒருவர்" என ஸ்டாலின் அளித்த 'சென்டிமென்ட்' பேட்டியும் இப்போது காங்கிரஸ் வட்டாரத்தை யோசிக்க வைத்திருக்கிறது. இந்தப் பேட்டிக்குப் பிறகு ராகுல் இறுக்கத்தைக் குறைத்துக் கொண்டு சற்று இறங்கி வந்திருப்பதாகச் சொல்கிறார்கள் விவரம் அறிந்தவர்கள்.

இது குறித்து நம்மிடம் பேசிய தமிழக காங்கிரஸ் சீனியர்கள் சிலர், "கூடுதல் சீட், ஆட்சியில் பங்கு என எங்கள் தரப்பில் திமுகவுக்கு அழுத்தம் தரப்பட்டாலும் இன்னொரு கூட்டணிக்குப் போவது குறித்து நாங்கள் எந்த முடிவுக்கும் வரவில்லை. அது தெரிந்து தான் ஸ்டாலினும் இந்த விஷயத்தில் நிதானம் காக்கிறார். காங்கிரஸ் தலைமையும் இந்த விஷயத்தில் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று முடிவெடுக்க முடியாமல் இருப்பதற்குக் காரணம் தேசிய அளவில் காங்கிரஸுக்கு கைகொடுக்கும் நம்பிக்கையான தோழனாக திமுக இருப்பது தான்.

காங்கிரஸ் திமுக கூட்டணிக்குள் பிளவு ஏற்பட்டால் தேசிய அரசியலில் இரண்டு கட்சிகளுக்குமே இழப்பு தான். இதையெல்லாம் ஒன்றுக்கு பலமுறை யோசித்த பிறகு, ஆட்சியில் பங்கு என்ற தமிழக காங்கிரஸாரின் கோரிக்கைக்கு “தேர்தலுக்குப் பிறகு பரிசீலிக்கலாம்” என்ற ஒரு பதிலையாவது திமுகவிடம் காங்கிரஸ் தலைமை எதிர்பார்க்கிறது” என்றனர்.

இந்த நிலையில், பிரவீன் சக்ரவர்த்தி மற்றும் காங்கிரஸ் பொதுச் செயலாளர் கே.சி.வேணுகோபால் தரப்பு ராகுலிடம், “காங்கிரஸுக்கு எப்படியும் 35 சீட்களுக்குக் குறையாமல் வாங்க வேண்டும். மேயர் உள்ளிட்ட உள்ளாட்சி பதவிகள், வாரியங்கள் உள்ளிட்டவற்றில் காங்கிரஸுக்கான பங்கு குறித்தும் இப்போதே ஒப்பந்தம் போட்டுக் கொள்வது நல்லது. அப்போதுதான் தமிழக காங்கிரஸாரை ஓரளவுக்காவது திருப்திப்படுத்த முடியும்” என்று சொல்லி இருக்கிறார்கள்.

இந்த நிலையில், நாளை மறுநாள் (17ம் தேதி) கே.சி. வேணுகோபால் தலைமையிலான டீம் சென்னைக்கு வருகிறது. கிரிஷ் சோடங்கர் தேவையற்ற குழப்பங்களை விளைவிப்பதாக திமுக தரப்பில் அதிருப்தி தெரிவித்திருந்த நிலையில், வேணுகோபாலை தமிழகத்துக்கு அனுப்பி வைக்கிறது காங்கிரஸ் தலைமை.

அன்றைய தினம் சென்னையில் நடக்கும் காங்கிரஸ் மாவட்டத் தலைவர்கள் கூட்டத்தில் கூட்டணி தொடர்பாகவும் கருத்துகளைக் கேட்கவிருக்கிறார் வேணுகோபால். இந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்படும் கருத்துகளின் அடிப்படையில் காங்கிரஸ் தலைமை ஒரு முடிவுக்கு வரலாம் என்பதே இப்போதைய நிலவரம். எனிமும் திமுக கூட்டணியை விட்டு காங்கிரஸ் பிரிவதற்கான வாய்ப்புகள் மிக மிகக் குறைவு என்றே கணிக்கிறார்கள் அரசியல் நோக்கர்கள்.

# எம்பிபிஎஸ் சீட் கிடைக்காததால் வாதாடிய மாணவன்: 7 நாளில் இடம் ஒதுக்க உச்ச நீதிமன்றம் உத்தரவு

ஜபல்பூர், பிப்.16-

மத்திய பிரதேசம் ஜபல்பூரைச் சேர்ந்தவர் அதர்வா சதுர்வேதி (19), நீட் தேர்வில் 530 மதிப்பெண் பெற்றார். பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினரான (இடபிள்யூஎஸ்) அவருக்கு, அந்த பிரிவில் மருத்துவக் கல்லூரியில் இடம் ஒதுக்கப்படவில்லை.

ம.பி.யில் இடபிள்யூஎஸ் பிரிவில் தனியார் மருத்துவக் கல்லூரியில் நீட் அடிப்படையில் மாணவர் சேர்க்கை தொடர்பான அரசாணை வெளியிடப்படாததே இதற்குக் காரணம். இதனால் அதர்வா, தனது தந்தை வழக்கறிஞர் மனோஜ் சதுர்வேதியின் துணையுடன் உச்ச நீதிமன்றத்தில் சிறப்பு அனுமதி மனுவை (Special Leave Petition – SLP) ஆன்லைனில் தாக்கல் செய்தார். சிறப்பு அனுமதி மனு என்பது இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 136ன் கீழ், கீழ் நீதிமன்றங்கள் அல்லது தீர்ப்பாயங்களின் உத்தரவுகளுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய அனுமதி கோரும் ஒரு சட்ட நடவடிக்கையாகும்.



இந்த மனு உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது தான் வாதிட 10 நிமிட அவகாசத்தை மட்டுமே கோரினார் அதர்வா. இடபிள்யூஎஸ் பிரிவில் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கையை அமல்படுத்த நீதிமன்றம் உத்தரவிடுவதற்கான காரணங்களை அதர்வா அடுக்கினார்.

அவரது கோரிக்கையை உச்ச நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது. இதையடுத்து அரசியலமைப்பு சட்டத்தில் 142வது பிரிவின் கீழ் தனக்கு உள்ள சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி, அதர்வாவுக்கு அடுத்த 7 நாட்களுக்குள் எம்பிபிஎஸ் சேர்க்கை வழங்குமாறு தேசிய மருத்துவ ஆணையத்துக்கும், மத்திய பிரதேச அரசுக்கும் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# ரூ.3.32 லட்சம் கோடியில் ஆந்திர பட்ஜெட் தாக்கல்

அமராவதி, பிப்.16-

ஆந்திர மாநில நிதி அமைச்சர் வி.கிஷோர் நேற்று சட்டப்பேரவையில் ரூ.3,32,205 கோடியில் 202627 ஆண்டுக்கான பட்ஜெட்டை தாக்கல் செய்தார்.




இதில், ரூ.6 ஆயிரம் கோடி அமராவதி தலைநகர பணிகளுக்காகவும், மின் வாரியத்திற்கு ரூ.13,934 கோடியும், சாலை, துறைமுகம் மற்றும் விமான நிலையங்கள் அமைக்க ரூ.13,546 கோடியும், தொழிற்சாலை பணிகளுக்கு ரூ.3,161 கோடியும், விசாகப்பட்டினம் வளர்ச்சி பணிகளுக்கு ரூ.28,000 கோடியும், ராயலசீமா குளோபல் தோட்டக்கலை கிளப்புக்கு ரூ.30,000 கோடியும், வேளாண்மை மற்றும் அதன் துணை துறைகளுக்கு ரூ. 13,598 கோடியும், போலவரம் அணைக்கட்ட ரூ.6,105 கோடியும், உள்துறைக்கு ரூ.9,165 கோடியும், மதிய உணவு திட்டத்திற்கு ரூ.2,161 கோடியும், பள்ளிகல்வித் துறைக்கு ரூ.32,308 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாக அறிவிக்கப் பட்டது.டிஜிட்டல் கைதுகள், ஆன்லைன் மோசடிகளை முழுமையாக ஒழிக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் சைபர் கிரைம் காவல் நிலையங்கள் அமைக்கப்படும் என பட்ஜெட் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது. பெண்கள் பாதுகாப்புக்கு ‘சக்தி’ மொபைல் செயலி உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் புகார் செய்த 7 நிமிடங்களில் போலீஸார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை நடத்துவர் என்றும் நிதி அமைச்சர் தெரிவித்தார்.

# ‘AI உச்சி மாநாட்டை நடத்த இந்தியாவே சரியான இடம்’ ஐ.நா பொதுச் செயலாளர்

புதுடெல்லி, பிப்.16-

"உலக விவகாரங்களில் அதிக செல்வாக்கு செலுத்தும் "மிகவும் வெற்றிகரமான" வளர்ந்து வரும் பொருளாதாரம் இந்தியா. எனவே ஏஐ (AI) உச்சிமாநாட்டை நடத்த சரியான இடம் இதுதான்’’ என்று ஐ.நா பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் தெரிவித்துள்ளார்.

பிப்ரவரி 16 முதல் பிப்ரவரி 20 வரை நடைபெறும் இந்தியா ஏஐ தாக்க உச்சி மாநாடு, உலகத் தெற்கில் நடத்தப்படும் முதல் கிமி உச்சி மாநாடாகும். இது 'மக்கள், உலகம் மற்றும் முன்னேற்றம்' என்ற மூன்று வழிகாட்டும் கொள்கைகளுடன் நடத்தப்படுகிறது.



ஏஐ தாக்க உச்சி மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இந்தியாவுக்கு புறப்படுவதற்கு முன்னதாக ஐ.நா. தலைமையகத்தில் பேசிய குட்டரெஸ், “இந்த உச்சிமாநாட்டை ஏற்பாடு செய்ததற்காக இந்தியாவை நான் மனதார வாழ்த்துகிறேன். அனைவருக்கும், எல்லா இடங்களிலும் நன்மை பயக்கும் வகையில் ஏஐ தன்னை வளர்த்துக் கொள்வது மிகவும் அவசியம். மேலும் உலகளாவிய தெற்கில் உள்ள நாடுகள் ஏஐ இன் நன்மைகளைப் பெறுவதில் ஒரு பகுதியாக இருப்பதும் மிகவும் அவசியம்.

ஏஐ மிகவும் வளர்ந்த நாடுகளின் ஒரு சலுகையாகவோ அல்லது இரண்டு வல்லரசுகளுக்கு இடையிலான பிரிவாகவோ இருப்பது முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது" என்று தெரிவித்தார். இது அமெரிக்கா மற்றும் சீனாவைக் குறித்து அவர் பேசிய கருத்தாக உள்ளது.

மேலும், "ஏஐ மனிதகுலத்தின் நலனுக்காக ஒரு உலகளாவிய கருவியாக மாறுவது முற்றிலும் அவசியம். உலகப் பொருளாதாரத்தில் மட்டுமல்ல, உலக விவகாரங்களிலும், அதன் செல்வாக்கிலும் பெரிய பங்களிப்பைக் கொண்ட மிகவும் வெற்றிகரமான வளர்ந்து வரும் பொருளாதாரமாக இந்தியா உள்ளது. எனவே, இந்த உச்சிமாநாட்டை நடத்துவதற்கும், ஏஐயின் மகத்தான ஆற்றல் மற்றும் அதன் அனைத்து ஆபத்துகள் குறித்து ஆழமாக விவாதிக்கப்படுவதை உறுதி செய்வதற்கும், ஏஐ முழு உலகிற்கும் என்பதை உறுதி செய்வதற்கும் இந்தியா சரியான இடம்.

உலகில் நாம் தவிர்க்க வேண்டிய இரண்டு விஷயங்கள் உள்ளன. ஒரே ஒரு சக்தி அல்லது உலகம் இரண்டு வல்லரசுகளுக்கு இடையில் பிரிக்கப்பட்ட ஒரு அமைப்பின் முழுமையான மேலாதிக்கத்தை நாம் தவிர்க்க வேண்டும். உலகின் பன்முகத்தன்மைக்கு, வளர்ந்து வரும் பொருளாதாரங்கள் உயர்ந்த பங்கைக் கொண்டிருக்கின்றன. இந்தியாவுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இடையிலான சமீபத்திய வர்த்தக ஒப்பந்தம் இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு.

உலகம் முழுவதும், அனைத்து வளர்ந்த நாடுகளும், வளர்ந்து வரும் பொருளாதாரங்களும் எந்த மேலாதிக்கமும் இல்லாமல் உண்மையான பன்முகத்தன்மையை உருவாக்க வேண்டும். ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலால் முடிவுகளை எடுக்க முடியாமல் போகும்போது எனக்கு ஏற்படும் விரக்தியை நீங்கள் கற்பனை செய்து கொள்ளலாம்.

மேலும், இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு இன்று உலகைப் பிரதிநிதித்துவப்படுத்த, பாதுகாப்பு கவுன்சிலின் அடிப்படை சீர்திருத்தம் நமக்குத் தேவை என்பது தெளிவாகிறது. இதன் மூலம் உலகம் முழுவதும் அமைதி மற்றும் பாதுகாப்புக்காக பயனுள்ள முடிவுகளை எடுக்க முடியும்.

இந்தியாவை வளர்ந்து வரும் பொருளாதாரங்களின் மையமாக நான் காண்கிறேன். மேலும் இந்த பன்முக உலகத்தை வடிவமைப்பதில் இந்தியா வகிக்கக்கூடிய பங்கின் மீது எனக்கு நிறைய நம்பிக்கை இருப்பதால், பிரதமர் மோடியுடன் இதைப் பற்றி விவாதிப்பதில் நான் மகிழ்ச்சியடைவேன்” என்றார்.

இந்த மாநாட்டில் பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரோன், பிரேசில் அதிபர் லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வா உள்ளிட்ட உலகத் தலைவர்கள் முதல் கூகிள் மற்றும் ஆல்பாபெட் தலைமை நிர்வாக அதிகாரி சுந்தர் பிச்சை, அடோப் தலைமை நிர்வாக அதிகாரி சாந்தனு நரேன் மற்றும் ஆந்த்ரோபிக் தலைமை நிர்வாக அதிகாரி டாரியோ அமோடி உள்ளிட்ட தொழில்நுட்ப வல்லுநர்கள் வரை கலந்துகொள்கின்றனர்.

# முதல்வர் குறித்து யூடியூப்பில் அவதூறு கருத்துஅதிமுக ஐடி விங்க் நிர்வாகி கைது

கரூர், பிப்.16-

முதல்வர் ஸ்டாலின் குறித்து யூடியூப்பில் அவதூறு கருத்து தெரிவித்த அதிமுக தகவல் தொழில்நுட்ப பிரிவு நிர்வாகி கைது செய்யப்பட்டார்.



கரூர் மாவட்டம் வேலாயுதம் பாளையத்தை சேர்ந்தவர் பசுபதி செந்தில் (50). இவர் அதிமுக ஈரோடு மண்டல சமூக வலைதள பிரிவு துணை தலைவராக உள்ளார். இவர் முதல்வர் ஸ்டாலின் மற்றும் முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி குறித்து யூடியூப்பில் அவதூறாக கருத்து தெரிவித்ததாக கூறப்படுகிறது.

இது குறித்து வேலாயுதம் பாளையம் போலீஸார் பிப்.11ம் தேதி பசுபதி செந்தில் மீது வழக்கு பதிவு செய்து நேற்று அவரை கைது செய்து கரூர் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். பசுபதி செந்திலை பிப்.27ம் தேதி வரை நீதிமன்ற காவலில் வைக்க மாஜிஸ்ட்ரேட் உத்தரவிட்டதை அடுத்து அவரை கரூர் கிளை சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். மேலும், பசுபதி செந்தில் பேசியதை ஒளிப்பரப்பு செய்த யூடியூப் ஐபி முகவரிக்கு சொந்தமானவரை போலீஸார் தேடி வருகின்றனர்.

# தேசிய விரைவுச் சாலைகளுக்கான சுங்கக் கட்டண விதிகளில் மாற்றம்: இன்று முதல் புதிய நடைமுறை அமல்

புதுடெல்லி, பிப்.16-

தேசிய விரைவுச் சாலைகளுக்கான சுங்கக் கட்டணம் வசூலிக்கும் விதிகளில் மத்திய அரசு மாற்றங்களை அறிவித்துள்ளது. இது இன்று முதல் அமலுக்கு வருகிறது.



இப்போது சாதாரண நெடுஞ்சாலைகளைவிட விரைவுச் சாலைகளுக்கு 25% கூடுதல் சுங்கக் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. மேலும் விரைவுச் சாலையின் பெரும் பகுதியில் கட்டுமானப் பணி முடியாமல் இருந்தாலும், அதன் முழு நீளத்துக்கும் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. இது வாகன ஓட்டிகளுக்கு பெரும் சுமையாக உள்ளது.

இந்நிலையில் மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தேசிய நெடுஞ்சாலைக் கட்டண (விகிதங்கள் நிர்ணயம் மற்றும் வசூல்) விதிகள், 2008ல் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி, விரைவுச் சாலை முழுமையாகத் திறக்கப்படாத பட்சத்தில், கட்டுமானப் பணிகள் முடிந்து செயல்பாட்டில் இருக்கும் தூரத்துக்கு மட்டுமே சுங்கக் கட்டணம் வசூலிக்கப்படும். முடிக்கப்படாத விரைவுச் சாலைகளில், தேசிய நெடுஞ்சாலைகளுக்கு இணையான குறைந்த கட்டணமே வசூலிக்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

கட்டுமானப் பணி முடிந்து செயல்பாட்டில் உள்ள விரைவுச் சாலை பகுதிகளைப் பயன்படுத்த வாகன ஓட்டிகளை ஊக்குவிப்பதற்காகவே மத்திய அரசு இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. இதனால் பழைய நெடுஞ்சாலைகளில் ஏற்படும் போக்குவரத்து நெரிசல் மற்றும் அதனால் ஏற்படும் சுற்றுச்சூழல் மாசு குறையும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் சரக்கு மற்றும் பயணிகள் போக்குவரத்து விரைவாக நடைபெறுவது உறுதி செய்யப்படும்.

இந்தத் திருத்தப்பட்ட விதிகள் இன்று முதல் நடைமுறைக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது. விரைவுச் சாலை முழுமையாகத் திறக்கப்படும் வரை அல்லது அதிகபட்சமாக ஓராண்டு வரை இந்தச் சலுகை அமலில் இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# எடப்பாடி பழனிசாமியை சந்தித்து ஆதரவு தெரிவித்த அரசியல் கட்சிகள்

சென்னை, பிப்.16-

அதிமுகவுக்கு வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் தேசியவாத காங்கிரஸ்(தமிழ்நாடு), கொங்கு நாடு விவசாயிகள் கட்சி மற்றும் விஸ்வகர்மா புரட்சி கழகம் ஆகியவை ஆதரவு தெரிவித்துள்ளன.

இதுகுறித்து அதிமுக தரப்பில் வெளியான அறிக்கையில், 'அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியை சேலம் நெடுஞ்சாலை நகரில் உள்ள அவரது இல்லத்தில், கொங்குநாடு விவசாயிகள் கட்சியின் மாநிலப் பொதுச் செயலாளர் கொங்கு ஆ. ராஜாமணி தலைமையில், அக்கட்சியின் நிர்வாகிகள் நேரில் சந்தித்து, நடைபெற உள்ள சட்டமன்றப் பொதுத் தேர்தலில், அதிமுகவுக்கு தங்களது கட்சியின் முழு ஆதரவை தெரிவித்துக்கொண்டனர்.

அதற்கு, எடப்பாடி பழனிசாமி, தமது மனமார்ந்த நன்றியையும், நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொண்டார். இந்நிகழ்வின்போது, கழக அமைப்புச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான எம்.எஸ்.எம். ஆனந்தன் உடனிருந்தார்.

மேலும், எடப்பாடி பழனிசாமியை, சேலம் நெடுஞ்சாலை நகரில் உள்ள அவரது இல்லத்தில் இன்று விஸ்வகர்மா புரட்சி கழக மாநிலத் தலைவர் மனோ சோழவராயர் தலைமையில், அக்கட்சியின் நிர்வாகிகள் நேரில் சந்தித்து, நடைபெற உள்ள சட்டமன்றப் பொதுத் தேர்தலில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு தங்களது கட்சியின் முழு ஆதரவை தெரிவித்துக்கொண்டனர்.

மேலும், எடப்பாடி பழனிசாமியை சேலம் நெடுஞ்சாலை நகரில் உள்ள அவரது இல்லத்தில், தேசியவாத காங்கிரஸ் கட்சியின் (தமிழ் நாடு) மாநிலத் தலைவர் நரேஷ்குமார் தலைமையில், அக்கட்சியின் நிர்வாகிகள் நேரில் சந்தித்து, நடைபெற உள்ள சட்டமன்றப் பொதுத் தேர்தலில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு தங்களது கட்சியின் முழு ஆதரவை தெரிவித்துக்கொண்டனர்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆளுநர் மாளிகையை முற்றுகையிட முயற்சி: தமிழக காங். தலைவர் செல்வப்பெருந்தகை உள்ளிட்டோர் கைது

சென்னை, பிப்.16-

மத்திய பாஜக அரசைக் கண்டித்து ஆளுநர் மாளிகையை முற்றுகையிட முயன்ற காங்கிரஸாரை போலீஸார் கைது செய்தனர்.




மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தில் காந்தியின் பெயரை நீக்கி, அந்த சட்டத்தை நீர்த்துப் போகச் செய்வதாகக் குற்றம்சாட்டி, மத்திய அரசை கண்டித்து, தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில், ஆளுநர் மாளிகையை முற்றுகையிடும் போராட்டம் சைதாப்பேட்டை பனகல் மாளிகை அருகே நேற்று நடைபெற்றது.

தென் சென்னை மத்திய மாவட்ட காங்கிரஸ் தலைவர் ஜோதி பொன்னம்பலம் ஏற்பாட்டில் நடைபெற்ற இப்போராட்டத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி மாநில தலைவர் செல்வப் பெருந்தகை தலைமையில் 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு மத்திய அரசைக் கண்டித்து கோஷங்களை எழுப்பினர். பிரதமர் மோடியின் உருவப்படத்தை எரித்தும், தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தினர். அதைத் தொடர்ந்து பனகல் மாளிகையில் இருந்து ஆளுநர் மாளிகையை முற்றுகையிடப் புறப்பட்ட காங்கிரஸாரை போலீஸார் தடுத்து நிறுத்தி கைது செய்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் செல்வப்பெருந்தகை கூறியதாவது: மத்திய நிதியைச் சரியான முறையில் மாநிலங்களுக்கு வழங்குவதில்லை. பேரிடர் காலங்களில் உரிய நிதி அளிப்பதில்லை. 100 நாள் வேலை உறுதி திட்டத்தில் மாநில அரசுகள் 40 சதவீதம் நிதி அளிக்க வேண்டும் என்ற நிபந்தனை மூலம் பாஜக ஆளாத மாநிலங்களைப் பழிவாங்க மத்திய அரசு முயல்கிறது. இதை கண்டித்தே போராட்டம் நடத்துகிறோம்.

தமிழகத்தில் பெண்களுக்கு வழங்கப்படும் உரிமைத் தொகையைத் தடுக்க பாஜகவும், அதிமுகவும் சதி செய்து நீதிமன்றத்தை நாட திட்டமிட்டிருக்கிறார்கள். அதை முறியடிக்க வேண்டும் என்பதற்காகவே முன்கூட்டியே மகளிர் உரிமைத் தொகை ரூ.5 ஆயிரத்தை முதல்வர் ஸ்டாலின் வழங்கி இருக்கிறார். இது வரவேற்கத்தக்கது. இவ்வாறு அவர் கூறினார்.

இப்போராட்டத்தில் காங்கிரஸ் எம்எல்ஏ துரை சந்திரசேகர், தமிழ்நாடு காங்கிரஸ் துணைத் தலைவர்கள் சொர்ணா சேதுராமன், இமையா கக்கன், மாவட்டத் தலைவர்கள் டில்லி பாபு, ஆர்.எஸ்.செந்தில், கராத்தே செல்வம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# “தேசிய ஜனநாயக கூட்டணிக்கு விஜய் வர வேண்டும்” ராம்தாஸ் அத்வாலே அழைப்பு

சென்னை, பிப்.16-

தமிழக மக்களின் நலனுக்காக, தவெக தலைவர் விஜய், தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைய வேண்டும் என மத்திய அமைச்சரும், இந்தியக் குடிய ரசுக் கட்சியின் தலைவருமான ராம்தாஸ் அத்வாலே தெரிவித்துள்ளார்.



இது குறித்து சென்னையில் நேற்று அவர் கூறியதாவது: பிரதமர் மோடி தலைமையிலான அரசாங்கத்தில் மூன்றாவது முறையாகப் பணியாற்றி வருகிறேன். பிப்.14, 2019 அன்று நடந்த பயங்கரவாதத் தாக்குதலில் 40 சி.ஆர்.பி.எஃப் வீரர்கள் வீர மரணமடைந்தனர். அந்த தியாகிகளின் குடும்பங்களுக்குத் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாகிஸ்தான் அண்டை நாடு என்பதால் இந்தியா அதனுடன் மோதலை விரும்பவில்லை. சாலை மேம்பாடு, இதர பிற்படுத்தப்பட்டோர் நலன், மகளிர் அதிகாரம் மற்றும் ஒட்டுமொத்த தேசமுன்னேற்றத்தில் அரசு தீவிரமாகக் கவனம் செலுத்தி வருகிறது.

2015ல் தொடங்கப்பட்ட பிரதமரின் முத்ரா திட்டத்தின் மூலம் ரூ.50,000 முதல் ரூ.20 லட்சம் வரையிலான கடன்கள் வழங்கப்பட்டு, தமிழகம் உட்பட நாடு முழுவதும் கோடிக்கணக்கான மக்கள் பயனடைந்துள்ளனர். உஜ்வாலா திட்டத்தின் கீழ் 10 கோடிக்கும் அதிகமான எல்பிஜி இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. தமிழகத்திலும் லட்சக்கணக்கானோர் இதனால் பயனடைந்துள்ளனர்.

அவசர சிகிச்சைக்கு ரூ.5 லட்சம் வரை வழங்கும் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தினால் ஏராளமான மக்கள் பயனடைந்துள்ளனர். ரூ.53 லட்சம் கோடி மதிப்பிலான மத்திய பட்ஜெட்டில் விவசாயம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறுபான்மையினர் நலனுக்காகப் பெருமளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தேசிய ஜனநாயகக் கூட்டணி நிச்சயம் திமுகவை வீழ்த்தும். மேற்கு வங்கத்திலும் பாஜக ஆட்சிக்கு வரும். இந்தியக் குடியரசுக் கட்சிக்கு தேர்தல் ஆணையம் கரும்பு விவசாயி சின்னத்தை ஒதுக்கியுள்ளது. தமிழக மக்களின் நலனுக்காக. தவெக தலைவர் விஜய். தே.ஜ கூட்டணியில் இணைய வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.



# தமிழகத்தில் பிப். 20, 21ல் லேசான மழைக்கு வாய்ப்பு!

சென்னை, பிப்.16-

தமிழகத்தில் வரும் பிப்.20, 21 ஆம் தேதிகளில் ஓரிரு இடங்களில் மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: பூமத்திய ரேகைக்கு அருகிலுள்ள இந்தியப் பெருங்கடலின் கிழக்கு பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக, ஒரு காற்றழுத்த தாழ்வுப் பகுதி தெற்கு வங்கக்கடலின் மையப்பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய பூமத்திய ரேகைக்கு அருகிலுள்ள இந்தியப் பெருங்கடல் பகுதிகளில் அடுத்த 48 மணி நேரத்தில் உருவாகக்கூடும்.

தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் நாளை (பிப்.16) முதல் 19ம் தேதி வரை வறண்ட வானிலை நிலவக்கூடும். 20ம் தேதி தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசான மழையும், 21ம் தேதி லேசானது முதல் மிதமான மழையும் பெய்யக்கூடும்.

வட தமிழக மாவட்டங்களில் நாளை முதல் 20ம் தேதி வரை ஓரிரு இடங்களில் அதிகாலை வேளையில் லேசான பனிமூட்டம் காணப்படும். குறிப்பாக நாளை சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர் மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் அதிகாலை வேளையில் மிதமான பனிமூட்டம் காணப்படும்.

17ம் தேதி சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் அதிகாலை வேளையில் லேசான பனிமூட்டம் காணப்படும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 32 டிகிரி செல்சியஸ், குறைந்தபட்ச வெப்பநிலை 23 டிகிரி செல்சியஸை ஒட்டி இருக்கக்கூடும். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.



# ஜம்முவில் குடிநீர் வரி செலுத்தாத அரசு ஊழியருக்கு சம்பளம் ‘கட்’

ஜம்மு, பிப்.16-

ஜம்மு பகுதியில் குடிநீர் வரி செலுத்தாத அரசு ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்படாது என்று அறிவிக்கப்பட்டு உள்ளது.

ஜம்மு காஷ்மீரில் சுமார் 15.64 லட்சம் வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டு உள்ளது. அதாவது 81.22 சதவீத வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் பெரும்பாலானோர் முறையாக குடிநீர் வரியை செலுத்தவில்லை என்று கூறப்படுகிறது. குறிப்பாக அரசு ஊழியர்களும் வரியை செலுத்தவில்லை என்று குற்றம் சாட்டப்பட்டு உள்ளது.

இந்த சூழலில் ஜம்மு பிராந்திய அரசு நிர்வாகம் அண்மையில் ஒரு சுற்றறிக்கையை வெளியிட்டு உள்ளது. இதன்படி, ‘‘குடிநீர் வரி நிலுவை இல்லை’’ என்று ஜல் சக்தி துறையிடம் இருந்து அரசு ஊழியர்கள் தடையில்லா சான்றை பெற்று அவர்கள் சார்ந்த துறையிடம் சமர்ப்பிக்க வேண்டும். அப்போதுதான் சம்பளம் வழங்கப்படும். இல்லையென்றால் சம்பளம் வழங்கப்படாது என்று சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.



■ திருநெல்வேலி மாவட்ட காவல்துறையில் சிறப்பாக பணியாற்றியமைக்காக ஏர்வாடி காவல் நிலைய காவல் ஆய்வாளர் செல்வி அவர்களுக்கு, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் V. பிரசன்ன குமார் IPS நற்சான்று வழங்கி பாராட்டினார்.

# துபாயில் 25 வருட காத்திருப்புக்கு பிறகு லாட்டரியில் ரூ.9 கோடி வென்ற இந்தியர்

அபுதாபி, பிப்.16-

துபாயைச் சேர்ந்த இந்திய தொழிலதிபரும் திரைப்பட தயாரிப்பாளருமான ராஜன் லால் (79) சுமார் 25 வருட காத்திருப்புக்குப் பிறகு லாட்டரியில் ரூ.9 கோடி வென்றுள்ளார்.

நீண்ட காலமாக துபாயில் வசிக்கும் ராஜன் லால், கடந்த ஜனவரி 30ம் தேதி வரிப் பிடித்தம் இல்லாத மில்லினியம் மில்லியனர் குலுக்கலுக்கான லாட்டரி சீட்டு வாங்கினார். குலுக்கலில் 3099 என்ற எண் கொண்ட அந்த லாட்டரி சீட்டுக்கு 10 லட்சம் டாலர் (ரூ.9 கோடி) பரிசுத் தொகை வென்றுள்ளார். ராஜன் லால் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு உயிர்பிழைத்தவர். மேலும் 3 முறை மாரடைப்பு மற்றும் இதய செயலிழப்பால் பாதிக்கப்பட்டவர். இந்நிலையில் தனது 79வது பிறந்த நாளை கொண்டாடிய சில நாட்களில் அவர் இந்தப் பரிசை வென்றுள்ளார். இதுகுறித்து ராஜன் லால் கூறுகையில், “நான் கற்பனை செய்து பார்க்காத மிகச் சிறந்த பிறந்த நாள் பரிசு இது” என்றார்.

பரிசுத் தொகையை எவ்வாறு செலவிடுவது என்பது குறித்து அவர் முடிவு செய்யவில்லை. மாறாக வரவிருக்கும் இந்தியா பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டியைப் பார்க்க ஆவலுடன் காத்திருக்கிறார். பல வருட விடா முயற்சிக்குப் பிறகு ராஜன் லாலுக்கு இந்த பரிசு கிடைத்துள்ளது. “கடந்த 25 ஆண்டுகளாக ஒவ்வொரு ஆண்டும் ஒரு டிக்கெட் வாங்கி வருகிறேன். இதுவரை பரிசு வென்றதில்லை. திரைப்படத் துறை நண்பர்களைச் சந்திக்க மும்பைக்கு பயணித்த போது இந்த டிக்கெட்டை வாங்கினேன். சவுதி அரேபியாவில் இருந்த போது இந்த பரிசுத் தொகை குறித்து எனக்கு தெரிவிக்கப்பட்டது. அந்த தருணம் நம்ப முடியாததாக இருந்தது” என்றார்.

# ரேஷன் புரட்சி” ஆத்தூர் தொகுதியில் புதிய கட்டிடங்களைத் திறந்து வைத்தார் அமைச்சர் ஐ.பெரியசாமி





ஆத்தூர், பிப்.16-

ஆத்தூர் தொகுதியில் அனைத்து கிராமங்களிலும் நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளதால், பொதுமக்கள் எவ்வித சிரமமுமின்றி ரேஷன் பொருட்களை வாங்கிச் செல்கின்றனர் என ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி தெரிவித்தார். திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் ஒன்றியம், குருநாதநாயக்கனூர் ஊராட்சிக்குட்பட்ட மன்னார்கோட்டையில் ரூ.10 லட்சம் மதிப்பீட்டிலும், கதிரணம்பட்டியில் ரூ.9.32 லட்சம் மதிப்பீட்டிலும் புதிதாகக் கட்டப்பட்ட நியாயவிலைக் கட்டிடங்களை அமைச்சர் இன்று திறந்து வைத்தார்.

*அமைச்சர் உரையின் முக்கிய அம்சங்கள்:*

முன்னதாக மக்கள் ரேஷன் பொருட்களை வாங்க 3 முதல் 5 கி.மீ. வரை நடந்து செல்லும் நிலை இருந்தது. தற்போது அவர்கள் வசிக்கும் பகுதியிலேயே கடைகள் அமைந்துள்ளதால் மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் கட்டப்பட்டுள்ள இந்தப் புதிய கட்டிடங்களில் முழுநேரம் மற்றும் பகுதிநேரக் கடைகள் செயல்படுவதால், மாதம் முழுவதும் தடையின்றி பொருட்கள் வழங்கப்படுகின்றன.

நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் மணி, திண்டுக்கல் மேற்கு வட்டாட்சியர் சுல்தான் சிக்கந்தர், ரெட்டியார்சத்திரம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மலரவன், கண்ணன் பொது விநியோகத்; திட்ட துணைப் பதிவாளர் கார்த்திகேயன். கூட்டுறவு சார்பதிவாளர்கள் அன்பரசு, மணிகண்டன், வட்ட வழங்கல் அலுவலர் மகேஷ், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர்கள் சுந்தரி அன்பரசு, புதுச்சத்திரம் மெர்சி (எ) லெட்சுமி, ராதாதேவி, முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் காளீஸ்வரி, மலைச்சாமி, நாகலெட்சுமி ரமேஸ், சுமதி கணேசன், விவேகானந்தன், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் ஞானசேகரன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் கே.புதுக்கோட்டை ரமேஸ், மாணவரணி அமைப்பாளர் செல்வம், உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்



■ தென்காசி மாவட்டம், குற்றாலம் கலைவாணர் அரங்கில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டத்தின் சார்பில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழாவில், மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே. கமல் கிஷோர்.இ.ஆ.ப. கர்ப்பிணி பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு விழாவை துவக்கி வைத்து, சீதனப் பொருட்களை வழங்கினார். உடன் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு. ராணி ஸ்ரீகுமார், வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் மரு.தி.சதன் திருமலைக்குமார் ஆகியோர் உள்ளனர்.



## மதுரையின் நிஜ நாயகன்: 30 ரூபாய்க்கு மதிய உணவு வழங்கும் மாற்றுத்திறனாளி மோகன்

மதுரை, பிப்.16-

மதுரை அரசு மருத்துவமனை வாசலில் கடந்த 12 ஆண்டுகளாக ஒரு மௌனப் புரட்சி நடந்து வருகிறது.

விலை வெறும் ₹30: சாம்பார் சாதம், ரசம் சாதம், இரண்டு வகை கூட்டு மற்றும் முட்டையுடன் கூடிய தரமான மதிய உணவு.

பசிப்பிணி மருத்துவர்: தனது சிறிய லாபத்தைக் கொண்டு, தினமும் 100 ஏழை எளிய மக்கள் மற்றும் நோயாளிகளுக்கு இலவசமாக அன்னதானம் வழங்கி வருகிறார்.

*தன்னம்பிக்கை:* மாற்றுத்திறனாளியாக இருந்தும், 'பிரண்ட்ஸ் அறக்கட்டளை' மூலம் பிறர் பசி ஆற்றுவதையே தனது வாழ்நாள் லட்சியமாகக் கொண்டுள்ளார் வி.மோகன். உடல் குறையைத் தாண்டி, உள்ளத்து அன்பால் மதுரையை நெகிழச் செய்யும் இவரைப் போன்ற மனிதர்களே இந்த உலகை அழகாக்குகிறார்கள்!



■ மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள கீழக்கரை கிராமத்தில் அமைந்துள்ள கலைஞர் நூற்றாண்டு ஏறு தழுவுதல் அரங்கில், அனைத்து மதுரை ரோட்டரி சங்கம் சார்பில் நடைபெற்ற ஜல்லிக்கட்டு போட்டியினை, அமைச்சர் மூர்த்தி தொடங்கி வைத்தார். சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன்,அகில உலக ரோட்டரி சங்க துணை தலைவர் முருகானந்தம்,மாவட்ட ஆளுநர் கார்த்திக், மற்றும் பலர் கலந்து கொண்டனர். இறுதியில் சிறந்து விளையாடி முதலாவதாக குலமங்கலம் வக்கீல் திருப்பதியின், ஜல்லிக்கட்டு காளை தேர்வு செய்யப்பட்டதை தொடர்ந்து, ரோட்டரி சங்கத்தின் சங்க துணை தலைவர் முருகானந்தம், மாவட்ட ஆளுநர் கார்த்திக் மற்றும் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு கன்றுடன் கூடிய நாட்டு பசு வழங்கி வாழ்த்துக்களை தெரி வித்தனர்.

## பூந்தமல்லி வடபழனி மெட்ரோ ரயில் வழித்தடம்: அதிவேக சோதனையை அடுத்த வாரம் நடத்த திட்டம்



பூந்தமல்லி, பிப்.16-

வடபழனி வரை உயர்மட்ட மெட்ரோ ரயில் தடத்தில் அதிவேக சோதனை ஓட்டம் அடுத்த வாரத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னையில், 2ம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில் கலங்கரை விளக்கம் பூந்தமல்லி வரையிலான 4வது வழித் தடத்தில் பூந்தமல்லி புறவழிச்சாலை நிலையம் வடபழனி வரை 14.64 கி.மீ. தொலைவுக்கு உயர்மட்ட பாதை அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வழித் தடத்தில் விரைவில் ரயில் போக்குவரத்து சேவையை தொடங்க மெட்ரோ ரயில் நிர்வாகம் திட்டமிட்டுள்ளது. இதற்காக, இத்தடத்தில் மெட்ரோ ரயில் பாதுகாப்பு ஆணையர் அனந்த் மதுகர் சவுத்ரி மற்றும் அவரது குழுவினர் கடந்த 11, 12 ஆகிய தேதிகளில் ஆய்வு மேற்கொண்டனர். முதல் நாளில், பூந்தமல்லி அய்யப்பன் தாங்கல் நிலையம் வரை ஆய்வு மேற்கொண்டனர்.

அப்போது, கட்டுமானப் பணிகள், மின்சாரம், தண்டவாளங்கள் மற்றும் முக்கிய மேம்பால கட்டமைப்புகள் ஆகியவை விரிவாக ஆய்வு செய்யப்பட்டன. 2ம் நாளில் அய்யப்பன் தாங்கல் நிலையம் வடபழனி மெட்ரோ நிலையம் வரை 8.50 கி.மீ. தொலைவுக்கு ஆய்வு மேற்கொண்டனர்.

3ம் நாளில் அதிவேக சோதனை ஓட்டம் நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், 2 நாட்கள் ஆய்வை முடித்து திரும்பி சென்றனர். இந்நிலையில், அடுத்த வாரத்தில் மெட்ரோ ரயில் அதிவேக சோதனை ஓட்டம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இது குறித்து, சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறுகையில், "இத்தடத்தில் மெட்ரோ ரயில் பாது காப்பு ஆணையர் மற்றும் அவரது குழுவினர் ஆய்வு செய்தனர். இது அவர்களுக்கு திருப்திகரமாக இருந்தது. தானி யங்கி முறையில் மெட்ரோ ரயில் ஓட்டுவது தொடர்பான நிகழ்வுக்கு (புரோகிராம்) ஓர் ஆவணம் தேவைப்படுகிறது.

இதை 3வது நபர் வழங்க வேண்டும். இந்த ஆவணம் ஓரிரு நாட்களில் கிடைத்து விடும். அதன்பிறகு, பிப்.18ம் தேதி முதல் 21ம் தேதிக்குள் மீண்டும் பாதுகாப்பு ஆணையர் வந்து, சோதனை ஓட்டம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்த மாதம் இறுதிக்குள் இந்த வழித்தடம் தயாராக இருக்கும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## சூரியக் கட்சியின் ‘மாப்பிள்ளை’ சாரால் கலக்கம் உள்குத்து உளவாளி

சென்னை, பிப்.16-

சூரியக் கட்சியின் ‘மாப்பிள்ளை சார்’ தென் பகுதியில் உள்ள ‘அல்வா’ மாவட்டத்தில் முகாமிட்டு ஆலோசனை நடத்தி வருவது கட்சியினர் மத்தியில் கலக்கத்தை உண்டாக்கி வருகிறதாம்.

ஏற்கெனவே அந்த மண்டலத்துக்கு பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள ‘தலைவரின் மகள்’, யாரெல்லாம் சரிப்பட்டு வரமாட்டார்கள் எனத் தெரிகிறதோ அவர்களை எல்லாம் களையெடுத்துவிட்டு புதியவர்களை பொறுப்புகளில் நியமிக்க சிபாரிசு செய்து வருகிறார். மாவட்டங்கள், நகரங்கள், ஒன்றியங்களைப் பிரித்தும் அனைவருக்கும் பொறுப்புகளை பகிர்ந்தளித்து வருகிறார்.வேட்பாளர் தேர்விலும் எவ்வித சஞ்சலத்துக்கும் இடம் கொடுக்காமல் தகுதியான நபர்களை டிக் அடித்து வைத்திருக்கிறாராம். இந்த நிலையில், ‘மாப்பிள்ளை சார்’ அங்கே முகாம் போடுவதால் புதுக் குழப்பம் பிறக்கிறதாம். யாரெல்லாம் ‘தலைவர் மகளால்’ ஒதுக்கப்பட்டார்களோ அவர்களெல்லாம் ‘மாப்பிள்ளை சார்’ எதிரே போய் பவ்யமாய் கைகட்டி நிற்கிறார்களாம்.இவர்களில் சிலர் தங்களுக்கு தேர்தல் வாய்ப்புக் கேட்டும் சிபாரிசுக்கு ஆட்களைத் திரட்டிக்கொண்டு போய் பேசுகிறார்களாம். இதெல்லாமே, ‘தலைவர் மகளுக்கு’ விசுவாசமாக கட்சிப் பணிகளில் ஈடுபட்டிருப்பவர்களை யோசிக்க வைக்கிறதாம்.




## நெய்வேலி யாருக்கு? படைகிளப்பத் தயாராகும் பாமக பங்காளிகள்




நெய்வேலி, பிப்.16-

பாமகவில் தந்தை மகன் மோதலை வைத்து பலரும் பல கணக்கு போட்டுக் கொண்டிருக்க, நெய்வேலி தொகுதியை மையமாக வைத்து பாமகவின் பழைய, புதிய பங்காளிகள் ஆளுக்கொரு திசையில் ஆவர்த்தனம் செய்து கொண்டு இருக்கிறார்கள்.

நெய்வேலி இப்போது திமுக வசம் இருக்கிறது. சிட்டிங் எம்எல்ஏவான சபா. ராஜேந்திரனே மூன்றாவது முறையாகவும் இங்கே போட்டியிடுவது உறுதி எனச் சொல்லப்படுகிறது. அதிமுக சார்பில் கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளரான சொரத்தூர் ராஜேந்திரன் இம்முறை நெய்வேலி நோக்கி வரலாம் என்கிறார்கள். அதேசமயம் இம்முறை நெய்வேலியை அதிமுக விடம் நமக்காக கேட்க வேண்டும் என அன்புமணி விசுவாசிகள் அவருக்கு அழுத்தம் கொடுக்கிறார்கள். ராமதாஸ் தரப்பும் நெய்வேலி மீது ஒரு கண் வைத்திருக்கிறது. இதனால் ராமதாஸ் தரப்பும், அன்புமணி தரப்பும் நெய்வேலியில் நிஜப் பரீட்சையில் இறங்கவும் வாய்ப்பிருக்கிறது.

ராமதாஸ் தரப்பு பாமக மாவட்டச் செயலாளர் கோ. ஜெகன், 2021 தேர்தலில் அதிமுக கூட்டணியில் இங்கே போட்டியிட்டு பார்டரில் ஃபெயிலானவர். அதனால் இம்முறை, விட்டதைப் பிடிக்கும் விடாமுயற்சியோடு ஆயத்தமாகி வருகிறார். அவரிடம் பேசியபோது, “அய்யாவின் உத்தரவுக்காக காத்திருக்கிறேன். வாய்ப்புக் கிடைத்தால் எப்படியும் வென்று காட்டுவேன்” என்றார். இதேபோல் அன்புமணி தரப்பில் மண்ணின் மைந்தரான இயக்குநர் தங்கர் பச்சானின் பெயரை உச்சரிக்கிறார்கள். இதுபற்றி அவரிடமே கேட்டதற்கு, “நான் இதுவரை சீட் கேட்கவில்லை. அன்புமணி சொன்னால் போட்டியிடத் தயார்” என்று சொன்னார்.

இவரைத் தவிர, பாமக முன்னாள் எம்எல்ஏவான விருத்தாசலம் ஆர்.கோவிந்தசாமியும் அன்புமணியின் பரிசீலனையில் இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் கோவிந்தசாமியிடம் இதுபற்றி கேட்டதற்கு, “ஒருமுறை எம்எல்ஏவாக இருந்து விட்டேன். படித்தவர்கள் அதிகம் உள்ள தொகுதி நெய்வேலி. நான் போட்டியிட்டால் வெற்றி பெறலாம். அன்புமணி எதையும் யோசிக்காமல் திட்டமிட மாட்டார்.

அதேசமயம், எனது உடல்நிலையையும் கவனிக்க வேண்டியிருப்பதால் குடும்பத்தினரையும் கலந்தாலோசிக்க வேண்டும்” என்றார். இவர்களைத் தவிர, கடலூர் வடக்குமாவட்ட பாமக செயலாளரான ரவிச்சந்திரனும், “சின்ன அய்யா மட்டுமல்ல... அண்ணி சவுமியாவின் ஆதரவும் எனக்கிருக்கிறது. அதனால் எனக்குத்தான் சீட் கன்ஃபார்ம்” என்கிறார்.

தமிழக வாழ்வுரிமைக் கட்சியினரும் நெய்வேலிக்காக காத்திருக்கிறார்கள். கடந்த முறை பண்ருட்டியில் வென்றஅக்கட்சியின் தலைவர் தி.வேல்முருகன், “இம்முறை நான் பண்ருட்டியில் போட்டியிட மாட்டேன்” என 2 மாதங்களுக்கு முன்பே டிக்ளர் செய்து விட்டார். அவரும் இம்முறை திமுக விடம் நெய்வேலியைக் குறிவைத்துக் கேட்கலாம் என்கிறார்கள். அதற்கு முன்னதாகவே அவரது சகோதரர்கள் நெய்வேலிக்குள் இறங்கி தேர்தல் வேலைகளில் சுறுசுறுப்பாகி இருப்பதும் திராவிடக் கட்சிகளை திகைக்க வைத்திருக்கிறது.

## ராஜகண்ணப்பனுக்கு காங்கிரஸ் பதிலடிதிமுக கூட்டணியில் மீண்டும் சலசலப்பு



மதுரை, பிப்.16-

‘கூட்டணி ஆட்சி இல்லை’ என கூறிய அமைச்சர் ராஜகண்ணப்பனுக்கு காங்கிரஸ் எம்.பி. மாணிக்கம் தாகூர் பதிலடி கொடுத்துள்ளார்.

மதுரை முனிச்சாலையில் நடந்த திமுக பொதுக்கூட்டத்தில் அமைச்சர் ராஜகண்ணப்பன், "தமிழகத்தில் கூட்டணி ஆட்சிக்கு இடமில்லை என முதல்வரே சொல்லிவிட்டார். 93 இடங்கள் வைத்திருந்தபோதே கலைஞர் யாருக்கும் பங்கு கொடுக்கவில்லை, பிறகு எப்படி இப்போது கொடுக்க முடியும்? வரும் தேர்தலில் 170 தொகுதிகளில் நாம் நிற்போம்; 150 முதல் 160 இடங்களில் உதயசூரியன் மட்டும் தனித்து ஜெயிக்கும்" எனப் பேசியிருந்தார்.

இதற்கு காங்கிரஸ் எம்.பி. மாணிக்கம் தாகூர், "2021ல் நீங்கள் 173ல் போட்டியிட்டு 133 இடங்களில்தான் வெற்றி. நாங்கள் கேட்பது நீங்கள் தோற்ற இடங்களைத்தான்.

அதிகாரப் பகிர்வு என்பது அவசியம்; ஆட்சியில் பங்கு கேட்பது எங்கள் உரிமை. அதை மக்கள் தீர்மானிப்பார்கள்" என பதிலடி கொடுத்தார். இதனால் திமுக கூட்டணியில் மீண்டும் சலசலப்பு ஏற்பட்டுள்ளது.

திமுக தலைமை அவசர அழைப்பு: தேமுதிக எல்லாம் ஒரு கட்சியா? என்றும் சமீபத்தில் ராஜகண்ணப்பன் பேசியிருந்தார். அதற்கு, ராஜகண்ணப்பனைப் பற்றி மக்களுக்குத் தெரியும் என்று தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா பதிலடி கொடுத்தார்.தேமுதிக, காங்கிரஸ் என அடுத்தடுத்து ராஜகண்ணப்பன் உதிர்க்கும் சர்ச்சை கருத்துகளால் கூட்டணிக்குள் சலசலப்பு வெடித்திருக்கிறது.

இதையடுத்து, நெல்லை தச்சநல்லூரில் கட்சி நிகழ்ச்சியில் இருந்த ராஜகண்ணப்பனை, திமுக தலைமை அவசரமாக சென்னைக்கு அழைத்திருக்கிறது. தூத்துக்குடியில் இருந்து விமானம் மூலம் சென்னை விரைந்த அவரிடம், இன்று தலைமை விளக்கம் கேட்கப்போவதாக சொல்கிறார்கள்.










SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000